1987 மே 4]

மதுரை மாவட்டம் நிலக்கோட்டையில் பழங்கால ஓவியம்

574—(* வினா எண் 5918) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை அருகில் பழங்கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, மத்திய மாநில தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தால் பழங்கால ஓவியங்கள், கட்டிடங்கள், அரண்மனைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால் தனியார்கள் யாராவது கிணறு தோண்டும்போது நாணயங் களோ, கட்டிடங்களோ ஏதும் கண்டுபிடித்து அரசுக்கு தெரிவித் தால் அவர்களுக்கு சன்மானம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பழைய நாணயங்கள் அப்படி கண்டுபிடிக்கப்பட்டால் அது அரசுக்குத்தான் சொந்தம். அவர்கள் சம்பந்தப்பட்ட தாசில் தாருக்கு அறிவிக்க வேண்டும். அறிவிக்கவில்லை என்றால், சன்மானம் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து பொருள்களைக் கைப்பற்றும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, மத்திய மாநில தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாகக் கட்டிடங்கள், அரண்மனைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இந்தக் கட்டிடங் களையெல்லாம் பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்ட் பாதுகாப்பாக வைத்திருக்கிறது. ஆனால் பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்ட்டின் சில அதிகாரிகள் அந்தத் தொல்பொருள் ஆராய்ச்சிக்குச் சம்பந்தப்பட்ட கட்டிடங்களை வாடகைக்கு விடுகிறார்கள். இதனால் அந்தத் தொல்பொருள் ஆராய்ச்சியினுடைய மரியாதை கெட்டுப் போகக்கூடிய சூழ்நிலை உருவாகின்றது. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்மிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடம், கட்டிடம் போன்றவற்றை யார் அப்படி தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற விவரம் கொடுத்தால் அதுபற்றித் தனியாக நடவடிக்கை எடுக்கலாம்

திரு. கோ. வீரய்யன்: தலைவர் அவர்களே, இந்தப் பழங்கால ஓவியங்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் தஞ்சை மன்னரால் கட்டப்பட்ட ஒரு அரண்மனை திருவிடைமருதூரிலே பாதுகாப்பு அற்ற நிலையிலே கிடக்கின்றது. அதைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தொல்பொருள் துறை இதுபற்றி ஆராய்ச்சி நடத்தி எங்கெங்கு பழங்காலத்தினுடைய புராதனக் கலைகள், ஓவியங்கள், சுவர் ஓவியங்கள் இருக்கின்றனவோ அவைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இடம் பற்றியும் துறை உரிய நடவடிக்கை எடுக்கும்.

மதுரை மாநகர் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள "பாதாளக் கோவில்".

575—(* வினா எண் 9507) **திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில், அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலைச் சார்ந்த புதுமண்டபம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட "பாதாளக் கோவிலை" சுற்றுலா பயணிகள் பார்க்கத் தக்கதாக ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, மதுரையினுடைய தொன்மையை எடுத்துக்காட்டக்கூடிய இடங்கள், அமைப்புகளில் ஒன்றான இந்தச் சுரங்கப் பாதையை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கூட வந்து பார்வையிட்